**தலைப்பு 331 – வாழ்வின் எழுச்சித் திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 331 – வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, ஒழித்தல் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 ஜூன் 27 ஆம் திகதி திணைக்கள பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 58,257.92 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 54,646.42 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 3,611.50 மில்லியன் எனப்படும் 6.20 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டுவருவன | 57,010.32 | 53,463.06 | 3,547.26 | 6.22 |
| மூலதனம் | 1,247.60 | 1,183.36 | 64.24 | 5.15 |
| மொத்தம் | **58,257.92** | **54,646.42** | **3,611.50** | **6.20** |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 33101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியாகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா.மில்லி யன் | ரூபா.மில்லி யன் | ரூபா.மில்லி யன் | ரூபா.மில்லி யன் | ரூபா.மில்லி யன் | ரூபா.மில்லி யன் |
| 300.00 | 263.53 | 225.00 | 276.66 | 700.00 | 44.94 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழ் காணப்பட்ட 7002/0000/00/0431/0016/000 ஆம் இலக்கம் கொண்ட கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கட்டுநிதி மீதி ரூபா 32.30 மில்லியன் தொகையாகும்.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழ் காணப்பட்ட 05 பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,550.19 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **வைப்புக் கணக்குகளின் இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0002/0168/000 | 1.74 |
| 6000/0000/00/0013/0123/000 | 2,541.59 |
| 6000/0000/00/0016/0113/000 | 5.30 |
| 6000/0000/00/0018/0111/000 | 1.50 |
| 6000/0000/00/0020/0019/000 | 0.06 |
| மொத்தம் | **2,550.19** |

### 2.5 கணக்காய்வு அவதானிப்பு

வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன், சில பதிவேடுகள் முறைப்படி மற்றும் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை என தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | வாகன அட்டவணைப் படுத்தும் பதிவேடு | நிதிப் பிரமாணங்கள் 802 மற்றும் 1647(இ) மற்றும் (உ) | பேணப்படவில்லை. |
| (ii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | இற்றைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | கணனிகள், துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | இற்றைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. |

**3.2 கணக்காய்வு சான்றுகள் இன்மை**

2013 இன் 01 இலக்க வாழ்வின் எழுச்சித் திணைக்களச் சட்டத்தின் கீழ் இலங்கை சமூர்த்தி அதிகார சபை வாழ்வின் எழுச்சி திணைக்களத்துடன் ஒன்றிணைக்க வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் இலங்கை சமூர்த்தி அதிகார சபையின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கலைத்தல் கணக்கில் உள்ள ரூபா 20,707,713 தொகை பெறுமதியான காகிதாகிகள் மற்றும் வர்த்தக இருப்புகள் தொடர்பாக உரிய இருப்புப் புத்தகங்கள் மற்றும் இருப்புக் கணிப்பீட்டு அறிக்கை மற்றும் திணைக்களத்திற்கு சேவைகள் பெற்றுக்கொள்ளும் 03 நிறுவனங்களில் வைப்புச் செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 179,000 தொகை வைப்பு மீதிகளை உரித்தாக்கிய பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அச் சொத்துக்களை உரிய முறைப்படி திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்டதென கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**3.3 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் அளித்தல்**

திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 04 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் அனுப்பியிருக்காததுடன் தாமதக் காலம் 2 மாதம் முதல் 15 மாதம் வரையான காலவீச்சொன்று கடந்திருந்தது. அந்த ஐய வினாக்களுடன் தொடர்புடைய கணக்கிடக் கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 102.7 மில்லியன் ஆகும்.

**3.4 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 19 செலவு விடயங்களுக்காக மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால் ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் கூட்டுத்தொகை ரூபா 70.68 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. அவை அந்த செலவு விடயங்களுடன் தொடர்புடைய தேறிய ஏற்பாடுகளில் 12 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சளவைக் கொண்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது செலவிடப்படாத நிவாரண உதவித்தொகை ரூபா 57.05 மில்லியன் செலவு விடயங்களுக்கு மிகை விதிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. அதே போல் கடந்த ஆண்டின் தேறப்படாத வைப்புக்கள் ரூபா 24.7 மில்லியன் தொகையினை மீளாய்வாண்டிற்கான நிவாரண உதவிநிதி செலவுக் கணக்கிற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக ரூபா 40,740.17 மில்லியனுக்கான நிவாரண உதவித் தொகையின் பிழையற்றதன்மை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.5 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேர்க்கும் விண்ணப்பப் கட்டணமாக சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 105,367,500 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. அவ் வைப்புக்களில் இருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்னர் மீளாய்வாண்டு இறுதியளவில் மீதி ரூபா 34,367,500 தொகையாக இருந்தது.

(ஆ) நுண் நிதி வங்கித் துறையின் கருமங்களுக்காக பொது வைப்புக் கணக்கு ஒன்றின் மூலம் செயற்படுவதற்காக தேவையான அங்கீகாரத்தை திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்ளாமல் வங்கித் துறையில் பெறுவனவுகள் ரூபா 9,000,000 தொகை மற்றும் செலவுகள் ரூபா 8,569,348 தொகை வைப்புக் கணக்கொன்றில் வைப்புக்கள் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) 2013 ஆண்டின் போது சமூர்த்தி நிவாரண உதவி கொடுப்பனவுக்காக வங்கி நிதிப் பிரிவின் முதலீடுகளில் இருந்து பெற்றிருந்த திரும்ப தீர்க்கப்படாத ரூபா 2,449,502,627 இற்கான மீதி தீர்க்கப்பட வேண்டிய பொறுப்பு ஒன்றாக இருந்த போதிலும், அதனை பொது வைப்புக் கணக்கிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஆண்டின் போது ஒருங்கிணைந்த நிறுவனங்களில் செலவுகளுக்காக ரூபா 2,982,636 தொகை பெறுமதியான காசோலைகள் வழங்கியிருந்ததுடன் கொடுப்பனவுக்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டு இறுதி அளவிலும் அக் காசோலைகள் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

## 3.6 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

விடய இலக்கம் 33101 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள, இறந்த, வேலை இடைநிறுத்தப்பட்ட மற்றும் சேவையில் இருந்து நீக்கிய 100 உத்தியோகத்தர்களிடம் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,662,770 தொகையாகக் காணப்பட்டதுடன், அந் நிலுவை மீதான 04 மாதங்கள் முதல் 19 வருடங்கள் வரையான காலவீச்சு முதல் கொண்டுவரப்பட்டுக் காணப்பட்டது. அந்த நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக திணைக்களத்திற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2002 மற்றும் 2003 ஆண்டுகளின் போது இடமாற்றம் பெற்று வந்திருந்த 03 உத்தியோகத்தர்கள் உட்பட 09 உத்தியோகத்தர்களிடம் நிலுவையாக இருந்த மீதிகளின் பெறுமதி ரூபா 746,964 தொகையாகக் காணப்பட்டது. அந்த கடன் மீதிகளை உரிய அமைச்சுகளுக்கு மற்றும் திணைக்களங்களுக்கு தீர்ப்பதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் 24 உத்தியோகத்தர்களின் கடன் கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையினால் அந்த

உத்தியோகத்தர்களிடம் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 1,268,663 இற்கான கடன் மீதிகளின் பிழையற்ற தன்மையை பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

**3.7 கடன் சுழல் நிதியம்**

இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காணப்பட்ட கடன் சுழல் நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய கடன் மீதி ரூபா 130.16 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன் அக் கடன் மீதிகள் அறவீடு செய்யப்பட்டதற்கான தகவல்கள் உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த கடன் சுழல் நிதியத்தை தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

**3.8 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.8.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 வழிகாட்டலின் பிரகாரம் விரிவான பெறுகைகள் திட்டம் மற்றும் பெறுகைள் நேரசூசி தயாரித்திருக்கவில்லை.

**3.8.2 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வு துறையினால் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றுவதற்காக திட்டமிட்டிருந்த தலைமை அலுவலகத்தின் 16 விடயப் பரப்புகளில் 115 விடயங்களில் 12 விடயப் பரப்புகளில் 106 விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.9 சொத்துக்கள் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சொத்துக்களை உரித்தாக்கல் மற்றும் பராமரித்தல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்துடன் ஒன்றிணைக்கப்பட்ட 03 அதிகார சபைகள் மற்றும் 02 திணைக்களங்களினால் நிலையான சொத்துக்கள் பதிவேடு இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணப்படாமையால் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்நிறுவனங்களை ஒழித்தல் கணக்குகளில் உட்படுத்தி திணைக்களத்திற்கு உரித்தாக்கப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 2,340.26 மில்லியன் தொகையான நிலையான சொத்துக்களின் பிழையற்ற தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ii) வாழ்வின் எழுச்சி திணைக்களத்திற்கு ஒன்றிணைக்கப்பட்ட இலங்கை சமுர்த்தி அதிகார சபை, இலங்கை தெற்கு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை மலைநாட்டு அபிவிருத்தி அதிகார சபை ஆகிய 03 அதிகார சபைகள் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட முறையே ரூபா 289.03 மில்லியன் தொகை, ரூபா 26.58 மில்லியன் தொகை மற்றும் ரூபா 0.64 மில்லியன் தொகை ஆக மொத்தம் ரூபா 316.25 மில்லியன் தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரை திணைக்களத்தினால் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருட்கள் மெய்மையாய்தல் நடத்துதல்**

2016 மார்ச் 31 திகதிய 05/2016 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருட்கள் மெய்மையாய்தல் நடத்தப்பட்டு அதன் அறிக்கை 2017 ஜூன் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 21 பிரதேச அலுவலகங்களில் வருடாந்த பொருட்கள் மெய்மையாய்தல் அறிக்கைகள் சமர்ப்பித்திருக்கவில்லை.

**(இ) வெளிசாராருக்கு வழங்கியிருந்த சொத்துக்கள்**

திணைக்களத்திற்குச் சொந்தமான 04 வாகனங்கள் வரிசை அமைச்சுக்கு 02 வருடங்களை அண்மித்த காலம் முதல் வழங்கியிருந்த போதிலும், அவ் வாகனங்களைப் பராமரிப்பதற்காக மீளாய்வாண்டின் போது திணைக்களத்தினால் ரூபா 855,416 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.10 தீர்க்கப்படாத சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) திணைக்களத்தினால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 7,479.78 மில்லியன் தொகையாக இருந்ததுடன், அவற்றில் ரூபா 7,415.78 மில்லியன் தொகையான பொறுப்புக்கள் 1 வருடம் முதல் 3 வருடங்கள் வரையான காலவீச்சிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்தது.

(ii) 10 செலவு விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதியேற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் மீதியினை மிகைத்து ரூபா 4,479.73 மில்லியன் தொகைக்கான பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தது.

**3.11 இணக்கமின்மைகள்**

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விளக்கப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா. | |
| **(i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | | |

| | | |
|---|---|---|
| • நிதிப் பிரமாணங்கள் 135,137 மற்றும் 138 | 21,653,387 | தென்பகுதி அபிவிருத்தி அதிகார சபையின் கருமங்களை முடிவுறுத்து வதற்காக 2014 ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்கான நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரக் கையழிப்பு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. இக் காலப்பகுதியில் 309 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் அங்கீகரிக்கப்பட்டாலும் சான்றுபடுத்தா மலும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| • நிதிப் பிரமாணம் 371 | 1,123,644 | 29 உத்தியோகத்தர்களுக்கு 45 சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட விடயத்திற்கான துணைக் கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அக் கட்டுநிதிகளை தீர்ப்பதற்காக 07 நாட்கள் முதல் 07 மாதங்கள் வரையான காலம் தாமதித்த பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |

**(ii) பொது நிதிச் சுற்றறிக்கை**

| | | |
|---|---|---|
| • 2015 ஜூலை 15 திகதிய 02/2015 ஆம் இலக்க சுற்றறிக் கையின் 02 ஆம் பந்தி | | திணைக்களத்தின் 13 வாகனங்கள் 03 வருடங்கள் முதல் 09 வருடங்கள் வரை காலவீச்சு முதல் பயன்படுத்தப்படாமல் துருப்பிடிக்க இடமளித்து காணப்பட்டது. |

- 2006 திசெம்பர் 22 திகதிய PF/423 ஆம் இலக்க சுற்றறிக்கை

திணைக்களத்தில் பேணப்படும் சமூகப் பாதுகாப்பு நிதியம், வீடமைப்பு அபிவிருத்தி நிதியம், வங்கிச் சங்கங்கள் காகிதாகிகள் சுழற்சி நிதியம், ஊழியர் கடன் சுழல் நிதியம், வாழ்வின் எழுச்சி நிதியம், வாழ்சின் எழுச்சி சமூகப் பாதுகாப்பு நிதியம் ஆகிய நிதியங்கள் தொடர்பாக திறைசேரியில் இருந்து ஆலோசனைகளைப் பெற்று அவற்றை நியதிச் சட்டமுறை ஆக்குவதற்கும், வருட இறுதியில் நிதிக்கூற்றுக்கள் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) வரித் தேவைகளுடன் இணக்கமின்மைகள்**

வாழ்வின் எழுச்சி சமூக அடிப்படை வங்கி மற்றும் வங்கி சங்கங்களை கணக்காணித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தும் முகாமைத்துவச் சபை அங்கத்தவர்களுக்கு மற்றும் வாழ்வின் எழுச்சி தேசிய சபையின் அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட ரூபா 2,455,291 தொகைக்கான குழுக் கொடுப்பனவுகளின் 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 10 சதவீதம் அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய உழைக்கும் போதே வரி ரூபா 245,529 தொகையினைக் கழித்து உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பியிருக்கவில்லை.

## 3.12 செயலாற்றுகை

2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் முன்னேற்றம் மீதான அவதானிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

(அ) ஜீவனோபாய அபிவிருத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்வதற்காக திட்டமிடல் மேற்கொள்ளப்படாமல் ரூபா 90 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 18 மாவட்டங்களிலுள்ள வரிய மக்களின் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி தொடர்பாக கவனம் செலுத்தாமல் 07 மாவட்டங்களின் அபிவிருத்தி விடயங்களுக்காக மாத்திரம் அவ் ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 05 தொழிற்பாடுகளை நிறைவேற்றி இருக்காததுடன், 03 தொழிற்பாடுகள் செயற்பட்டிருந்த போதிலும் எதிர்பார்த்த பெறுபேறுகளை பெற்றிருக்கவில்லை.

**3.13 வங்கி கணக்குகள் நெறிப்படுத்துவதில் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 395(ஈ) பிரகாரம் திணைக்களத்தின் உத்தியோக வங்கிக் கணக்கில் வங்கி இணக்கக் கூற்று தயாரிப்பதில் நீண்ட தாமதம் காணப்பட்டது.

(ஆ) தலைமை அலுவலகம் மற்றும் 09 மாவட்ட அலுவலகங்களின் உத்தியோக நடைமுறை கணக்குகளில் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்க சமர்ப்பிக்கப்படாத செல்லுபடியாகும் காலமாகிய 06 மாதங்களை கடந்துள்ள கூட்டுத்தொகை ரூபா 806,638 தொகை பெறுமதியான 113 காசோலைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரை நிதிப் பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தலைமை அலுவலக மற்றும் 02 மாவட்ட அலுவலகங்களின் வங்கி இணக்கக் கூற்றுக்களில் இனங்காணப்படாத செலவு வைத்தல்கள் ரூபா 2,066,851 தொகை மற்றும் வைப்புச் செய்திருந்த ஆனால் தேறப்படாத 01 மாதம் முதல் 11 மாதம் வரை காலவீச்சு முதல் காணப்படும் 18 காசோலைகளின் பெறுமதி ரூபா 3,362,178 தொகையும் காணப்பட்டது.

**3.14 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்துடன் இணைக்கப்பட்ட சமூர்த்தி ஆணையாளர் நாயக திணைக்களத்தின் 05 வாகனங்கள் மற்றும் இலங்கை மலைநாட்டு அபிவிருத்தி அதிகார சபையின் 03 வாகனங்கள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாகனங்களில் சமூர்த்தி ஆணையாளருக்கு மற்றும் ஆணையாளர் (நிதி)க்கு 02 வாகனங்கள் இணைக்கப்பட்டிருந்தது.

(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டங்களின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காத அமைச்சுச் செயலாளரின் அறிவித்தல் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் மீது மத்திய மாகாணத்தில் பாதஹேவாவிட்ட நீர் வழங்கள் திட்டத்திற்காக 2016 ஆகஸ்ட் மாதத்தில் மத்திய மாகாண சபைக்கு ரூபா 32,500,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. இந்த ஏற்பாடுகள் மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட திட்டத்திற்காக பயன்படுத்தப்படாமல் மாகாண சபையின் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

(இ) திணைக்களத்தால் செயல் நோக்கில் அடங்காத தொழிற்பாடு ஒன்றான கீழ் ஹேவாவிட்ட பிரதேச செயலகப் பிரிவில் பாடசாலை பிள்ளைகளுக்கு தலை ஆபரணங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் ரிகில்லகஸ்கட பஸ் தரிப்பிட அபிவிருத்திக்காக மத்திய மாகாண சபையினால் முறையே ரூபா 2,030,000 தொகை மற்றும் ரூபா 12,300,000 இற்கான மதிப்பீட்டு செலவுகளுக்காக கூட்டுத்தொகை ரூபா 14,330,000 இற்கான ஏற்பாடுகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

**3.15 முறைசாராக் கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறைசார் விதமின்றி காணப்பட்டது. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(அ) அரச பெறுகைகள் வழிகாட்டல் நடைமுறையிலிருந்து விளகல்**

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுகைகள் தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 3.4 வழிகாட்டலின் பிரகாரம் விலைகூறல் அழைக்கப்படாமல் 140 பதவிநிலை உத்தியோகத்தர்களில் பங்குபற்றலுடன் கூட்டுத்தொகை ரூபா 2,132,030 தொகை செலவிடப்பட்டு ‘‘சமூர்த்தி இயக்கத்தின் புதிய பிரயாணப் பாதை’’ தொடர்பாக செயலமர்வு ஒன்று நடாத்தப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்கான திட்டமிட்ட தொழிற்பாடு ஒன்றல்லாத வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தில் கருப்பொருள் கீதத்தை மாற்றுதல் மற்றும் உருவச் சட்டங்கள் சேகரிக்கும் தொழிற்பாட்டினை நிறைவேற்றுவதற்காக அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல்களான 4.1(இ), 3.8(1)(அ), 2.7.5 மற்றும் 2.8.4 வழிகாட்டல்களுக்கு புரம்பாக ரூபா 1,040,000 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(iii) திணைக்களத்தின் ஊடக நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 4,000,000 இற்கான ஏற்பாடுகளை பயன்படுத்தி 250 டப் கணனிகள் 2016 திசெம்பர் மாத இறுதியில் அவசர கருமம் ஒன்றென கணித்து அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 6.2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைகளுக்குப் புறம்பாக கொள்வனவு செய்து வினியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் 03 மாத காலமாக களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

**(ஆ) போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இனங்காணப்பட்ட குறிப்பிட்ட கருமம் ஒன்றல்லாத ஒரு வாழ்வின் எழுச்சி சமூக அடிப்படை வங்கியில் இருந்து வருடாந்தம் ரூபா 10,000 வீதம் சேகரிக்கப்பட்டிருந்த பணம் ‘‘வங்கி விளம்பர மற்றும் மேம்படுத்தல் நிதியம்’’ என்ற பேரில் பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டு முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதி வரை முதலீட்டு மீதி ரூபா 30,059,302 தொகையாக இருந்தது. அம் முதலீடுகளில் ரூபா 3,799,948 தொகை முதிர்வடைய முன்னர் தேறவைத்த 2016 ஏப்ரல் மாதத்தில் ஹங்குரங்கத்தையில் நடத்தப்பட்ட சூரிய விழாவிற்கான செலவுகள் உட்பட பல்வேறு செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 3771 சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை நடத்துவதற்காக முறையான எழுத்துமூல உடன்படிக்கை ஒன்று இன்றி ரூபா 97,580,000 இற்கான ஆலோசனை கட்டணம் ஒன்றின் மீது அரச பல்கலைக்கழகமொன்றிற்கு சாட்டப்பட்டிருந்தது.

(iii) வாழ்வின் எழுச்சி சமூக அடிப்படை வங்கிகளின் மற்றும் வாழ்வின் எழுச்சி சமூக அடிப்படை சங்கங்களில் நிதி விடயங்களின் மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தும் முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்களுக்கு முறையே ரூபா 7,500 தொகை மற்றும் ரூபா 10,000 ஆக 2015 மே மாதம் முதல் 2017 ஏப்ரல் மாதம் வரை கூட்டுத்தொகை ரூபா 1,492,500 இற்கான படியொன்று

செலுத்தியிருந்தது. இந்தக் குழுவின் தலைவர் மற்றும் செயலாளர் ஆக செயற்படும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு சம்பளத்தின் 1/3 தொகை வீதம் 2016 நவம்பர் முதல் 2017 ஏப்ரல் மாதம் வரை ரூபா 190,791 இற்கான படி ஒன்றும் முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் செலுத்தப்பட்டிருந்தது.

(iv) 2013 இன் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 7(1) இன் பிரகாரம் திணைக்களத்திற்கு உதவி செய்வதற்காக நிறுவப்பட்டிருந்த வாழ்வின் எழுச்சி தேசிய சபைக்கு நியமனம் செய்யப்பட்ட அங்கத்தவர்களுக்கு படிகள் செலுத்துவது தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. 11 அங்கத்தவர்களுக்கு 23 சபை அமைர்வுகளில் பங்குபற்றியதற்காக ஒரு சபை அமர்வுக்காக ரூபா 4,000 வீதம் கூட்டுத்தொகை ரூபா 772,000 தொகை திறைசேரியின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் செலுத்தப்பட்டிருந்தது.

### 3.16 நிதி ஒழுங்கீனத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஜனவரி மாதம் முதல் 2016 ஜனவரி மாதம் வரையான காலப்பகுதியில் கண்டி மாவட்ட வாழ்வின் எழுச்சி அலுவலகத்தில் ரூபா 23,406,848 இற்கான நிதி மோசடி ஒன்று ஏற்பட்டிருந்தது. அதற்காக கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டு கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எனினும் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்திருக்கவில்லை.

(ஆ) பண்டாரகம பிரதேச செயலகத்தை சேர்ந்த பெண் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரினால் 2015 ஆண்டின் போது செய்யப்பட்டிருந்த ரூபா 1,016,170 தொகைக்கான நிதிமோசடி தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து மோசடி செய்யப்பட்ட பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.17 இழப்புகள் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கடமை பிரயாணம் அல்லாத பிரயாணங்களின் போது ஏற்பட்டிருந்த 02 வாகன விபத்துக்கள் தொடர்பாக நட்டங்கள் மற்றும் சேதங்களை அறிவித்தல் மற்றும் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் விசாரணைகள் நடாத்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவற்றில் பழைய நிலைமைக்கு கொண்டு வரமுடியாதவாறு முற்றாக சேதமடைந்த வாகனம் சாரதி அல்லாத வேறு ஒருவரினால் ஓட்டப்பட்டிருந்தமையால் காப்புறுதி நட்டஈடு செலுத்துவதற்காக மறுக்கப்பட்டமையால் ஏற்பட்டிருந்த இழப்பினை கணித்திருக்கவில்லை.

(ஆ) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தில் ஒன்றிணைக்கப்பட்ட மூன்று அதிகார சபைகளின் உத்தியோகத்தர் 14,403 ஆட்களுக்காக கணிக்கப்பட்ட ரூபா 3,327.66 மில்லியன் தொகையான பணிக்கொடையை செலுத்துவதற்காக திறைசேரி ஏற்பாடுகள் தாமதித்ததன் காரணத்தினால் 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பிரகாரம் 30 சதவீதம் ஆக கணிக்கப்பட்ட மிகைவிதிப்பு ரூபா 998,298,753

தொகையாகக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது அவற்றில் 3,307 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 292,041,781 இற்கான மிகைவிதிப்பு செலுத்தப்பட்டிருந்தது.

**3.18 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்**

திணைக்களத்திற்கான கணக்காய்வு அறிக்கைகளிலுள்ள கணக்காய்வு பந்திகளின் மூலம் சுட்டிக்காட்டிய பற்றாக்குறைகள் தொடர்பாக திணைக்களத்தினால் சரிசெய்யப்படாத பந்திகளுடன் தொடர்பு பின்வருமாறு.

| | கணக்காய்வாளர் தலைமை அதிபதி யின் அறிக்கையுடன் தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|---|
| | ஆண்டு | பந்தி இலக்கம் | |
| (அ) | 2015 | 3.1(அ) | நிதிப் பிரமாணம் 845(1) இன் பிரகாரம் 26 ஆவது அனுபந்தத்தின் பிரகாரம் கடமை தொலைபேசிப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 | 3.1(ஆ) மற்றும் 3.10.1(ஆ)(iii) | நிதிப் பிரமாணங்கள் 890 மற்றும் 891(1) இன் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களிடம் பிணை வைப்புக்களைப் பெற்று பிணைப் பதிவேட்டினை பேணுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 2015 | 3.1(ஈ) | நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்களை உட்படுத்தி சேதங்கள் தொடர்பாக பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2015 | 3.9(இ)(i) | கணிப்பீட்டு அறிக்கைகளின் மூலம் சுட்டிக் காட்டியிருந்த வங்கி காகிதாகிகள் சுழல் நிதியத்தில் பயன்படுத்த முடியாத ரூபா 2,395,081 பெறுமதிக்கான காகிதாகிகள் இருப்பினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2015 | 3.9(ஈ)(ii) | இலங்கை தென்பகுதி அபிவிருத்தி அதிகார சபையினால் குத்தகைக்கு கொடுத்திருந்த 09 காணிகள் மற்றும் கட்டிட ஆதனங்களை திணைக்களத்திற்கு உரித்தாக்கி குறிப்பிட்ட வாடகையாளர்களுடன் புதிய உடன்படிக்கைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஊ) | 2015 | 3.9(ஊ)(111) | “செல்வம் படைத்த வீடொன்று” நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2015 ஆண்டு முதல் ரூபா 2,992.78 மில்லியனிற்கான பொறுப்பொன்று ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டியிருந்த போதிலும் அவ்வாறான பொறுப்பு ஒன்று ஏற்படுத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளின் மூலம் திணைக்களத்திற்கு ஒதுக்கியிருக்க வில்லை. |
| (எ) | 2015 | 3.10.1(அ) | 2013 இன் 01 ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி சட்டத்தின் பிரிவுகள் 36 மற்றும் 37 இன் பிரகாரம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி நிதியம் மற்றும் வாழ்வின் எழுச்சி சுழல் நிதியம் என்பன தாபிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2015 | 3.10.1(ஆ)(ii) | நிதிப் பிரமாணம் 763 இன் பிரகாரம் தலைமை அலுவலகத்தில் களஞ்சியப் பண்டங்கள் மற்றும் காகிதாகிகள் சுழல் நிதியத்தின் இருப்பு தொடர்பாக களஞ்சிய சட்டவாக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2015 | 3.10.1(இ)(ii) | 1994 ஆகஸ்ட் 03 திகதிய 26/92(1) இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த வாகனங்கள் தவிர ஏனைய வாகனங்களில் அரச இலட்சினை மற்றும் திணைக்களத்தின் பெயர் என்பவற்றைப் பதிவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**3.19 முகாமைத்துவப் பலவீனங்கள்**

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 மே மாதம் ஏற்பட்டிருந்த வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு மூலம் இடருக்கு உள்ளான பொது மக்களுக்கு உணவு வகைகள் கொள்வனவு செய்வதற்காக உலக உணவு அமைப்பில் இருந்து 2016 ஜுலை 05 திகதி முதல் அக்தோபர் 05 ஆம் திகதி வரை செயற்பாட்டுக் காலத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 265 மில்லியன் உதநி நிதியில் இருந்து வருட இறுதி வரை நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்தி முடிப்பதற்காக முடியாமையின் காரணமாக ரூபா 113 மில்லியன் அண்மித்த உதவி நிதியொன்றினை இழந்துள்ளது. பிரதேச செயலகங்கள் ஊடாக வினியோகிக்கப்பட்டிருந்த ரூபா 152,321,910 இற்கான உதவிநிதி உரிய முறைப்படி வினியோகிக்கப்பட்டுள்ளனவா என அவ் அலுவலகங்களில் இருந்து உறுதிப்படுத்தல்கள் பெற்றிருக்கவில்லை.

(ஆ) நாட்டில் காணப்படும் வாழ்வின் எழுச்சி சமூக அடிப்படை வங்கிகள் 1074 மற்றும் சமூக வங்கிச் சங்கங்கள் 331 அமைந்துள்ள காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியினை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அந்த 1,115 கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் உரிமை திணைக்களத்திற்கு இல்லாதிருந்த போதிலும் அக் காணிகளை தனதாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) திணைக்களத்துடன் இணைந்துள்ள நிறுவனங்களில் இருந்து சாட்டப்பட்டிருந்த 30 வாகனங்களை திணைக்களத்தின் பேரில் பதிவு செய்திருக்காமை, தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைக்கு தேவைப்பட்ட 17 வாகனங்கள் ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்காமை, சாரதிகள் இணைக்கப்பட்டிருக்காத 15 வாகனங்களுக்காக எரிபொருள் வழங்கப்பட்டிருத்தல், படலை அனுமதிப்பத்திரம் பயன்படுத்தப்படாமை, குறிப்பிட்ட வாகனங்களில் திணைக்களத்தின் பெயர் அரச இலாஞ்சனை என்பன பதியப்படாமை ஆகிய விடயங்களின் காரணமாக திணைக்களத்தின் வாகனங்களின் நிருவாகம் திருப்திகரமான நிலைமையில் காணப்படவில்லை.

(ஈ) சமூர்த்தி அதிகார சபையின் 2013 ஆண்டிற்கு முன்னர் சமூக அடிப்படை வங்கிகள் மற்றும் 18 வங்கிச் சங்கங்களின் வெளிப்படுத்தப்பட்டிருந்த நிதி மோசடிகளின் பெறுமதி ரூபா 12,023,000 தொகையும், வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் ஆரம்பித்த பின்னர் 2014 ஆண்டு முதல் 2016 அண்டு வரை சமூக அடிப்படை வங்கி மற்றும் வங்கிச் சங்கங்கள் 63 இல் நடைபெற்றிருந்த மோசடிகளின் பெறுமதி ரூபா 108,902,167 தொகை ஒன்று காணப்பட்டது. மேலும் வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்கள் 25 இல் நடைபெற்றிருந்த நிதி மோசடிகளின் பெறுமதியினை கணித்திருக்கவில்லை.

(உ) சர்வதேச சிகரட் மற்றும் மதுபான எதிர்ப்பு தினத்திற்காக நடத்தப்படும் கொடிகள் விற்பனை செய்யும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றின் மூலம் சேகரிக்கப்பட்டிருந்த பணத்தில் இருந்து குறைந்த வருமானமுடைய வறிய மக்களின் பிரச்சினைகளுக்கு உதவிகள் வழங்கும் குறிக்கோளுடன் வாழ்வின் எழுச்சி சமூக அடிப்படை வங்கிகளில் பேணப்படும் வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தி மன்றத்தை உருவாக்கி அதனது கருமங்களை முறைசார் விதமாக திட்டமிடுவதற்கு நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. மீளாய்வாண்டு இறுதியில் நிதியத்தின் மீதி ரூபா 218,278,603 தொகையாகியிருந்தது. மேலும், குறிப்பிட்ட விற்பனை விலையொன்று இன்றி கொடிகள் விற்பனை செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 229,625,062 இற்கான வருமானத்தின் பிழையற்ற தன்மையையும் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 3.20 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்ட பதவியணி யினர் | உள்ளவாறான பதவியணி யினர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 72 | 87 | - | 15 |
| (ii) | மூன்றாம் நிலை | 2,581 | 28 | 2,553 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 21,193 | 23,162 | - | 2,419 |
| (iv) | ஆரம்ப நிலை | 187 | 176 | 11 | - |
| (v) | ஏனையவைகள் (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 20 | - | 20 |
| | **மொத்தம்** | **24,033** | **23,923** | **2,564** | **2,454** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை தவிர ஏனைய சேவைகளுக்காக சேவை யாப்பு மற்றும் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஆட்சேர்ப்பு பதவி உயர்வு வழங்குதல் மற்றும் ஓய்வு பெறல் ஆகிய விடயங்கள் மேற்கொள்வதற்கும் திணைக்களத்தில் இருந்து ஓய்வுபெற்ற ஊழியர்கள் மற்றும் இறந்துள்ள ஊழியர்கள் 155 பேருக்காக ஓய்வூதிய நலன்களை பெறுவதற்கு இயலாதுள்ளது.

(ஆ) இலங்கை நிருவாக சேவையில் I தரம் உத்தியோகத்தரினால் நிரப்பப்பட வேண்டிய 18 வாழ்வின் எழுச்சி மாவட்ட பணிப்பாளர் பதவிகள், இலங்கை திட்டமிடல் சேவையின் II மற்றும் III ஆம் தரங்களில் இருந்து மற்றும் பதில் கடமைகள் அடிப்படையின் கீழ் கடமைகள் அணவல் செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஜுலை மாதம் அளவில் 21 மாவட்ட அலுவலகங்களில் கணக்காளர் பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன.